மாதிரி வினாத்தாள்

செல் உயிரியல் (Z) 1

11th Standard

Reg.No. : 

**உயிரியல்**

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
II. நீலம் மற்றும் கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 00:45:00 Hrs | Total Marks : 35

## பகுதி - அ

5 x 1 = 5

1) பொருளின் அளவைக் காட்டிலும் அளவைப் பெரிதாக்கிக் காண்பிக்கும் திறன் இவ்வாறு அழைக்கப்படும்.
(a) வேறுபடுத்தும் திறன் (b) ஊடுருவிச் செல்லும் திறன் (c) உருபெருக்கும் திறன் (d) கடத்தும் திறன

2) நுண்ணோக்கியில் பொருளின் மீது ஒளி இதன் வழியாகக் குவிக்கப்படுகிறது.
(a) குவிப்பான் லென்சு (b) பொருளருகு லென்சு (c) கண்ணருகு லென்சு (d) எண்ணெய் வழி லென்சு

3) நுண்ணோக்கி ஆய்வில் உட்கருவை சாயமேற்ற உபயோகப்படுத்துவது .........
(a) நியூட்ரல் சிவப்பு (b) ஜேனஸ் பச்சை (c) இயோசின் (d) ஹெமெட்டாக்சிலின்

4) செல்லியல் உத்திகளில் போயின்ஸ் கரைசலை உபயோகப்படுத்துவது .........
(a) நிலைப்படுத்துதல் (b) நீர் வெளியேற்றுதல் (c) சுத்தப்படுத்துதல் (d) பதிய வைத்தல்

5) பிளாஸ்மா படலத்தில் உள்ள இரு கொழுப்பு படலங்களையும் சூழ்ந்துள்ளது ........
(a) புரோட்டீன்கள் (b) கார்போஹைட்ரேட்டுகள் (c) நீர் மூலக்கூறுகள் (d) நியுக்ளிக் அமிலம்

## பகுதி - ஆ

7 x 2 = 14

6) செல்லியலோடு தொடர்புடைய புதிய அறிவியல் பிரிவுகளின் பெயர்கள் என்ன?
7) நுண்ணோக்கியின் செயல்பாட்டில் வேறுபடுத்தும் திறன் என்றால் என்ன?
8) ஒரு கூட்டு நுண்ணோக்கியின் பாகங்கள் யாவை?
9) முக்கிய சாயமேற்றிகள் யாவை?
10) மைட்டோ காண்ட்ரியாவில் நடைபெறும் இரு முக்கிய உயிர் வேதிவினைகளின் பெயர்கள் யாவை?
11) மெட்டாஸ்டாசிஸ் என்றால் என்ன?
12) ஆங்கோ ஜீன்கள் என்றால் என்ன?

## பகுதி - இ

2 x 3 = 6

13) செல் கோட்பாட்டைப் பற்றி குறிப்பு வரைக.
14) செல் உயிரியலில் உபயோகிக்கப்படும் வெவ்வேறு அலகுகள் யாவை?

## பகுதி - ஈ

2 x 5 = 10

15) புற்றுநோய்க்கான காரணங்கள் யாவை?
16) நுண்ணோக்கியின் மூலம் நோக்க எவ்வாறு பொருட்களை தயார் செய்ய வேண்டும் என்பதனை விவரி.

*******************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in